அலை 1 ஓசை 306 Alai Osai (Independent Tamil Daily) Madras
Regd. No. M 8891
Phones 662233 & 663950
மானப்பதிப்பு அலை 20 காசு 4 பக்கம் 16 காசு


25 HAUTIN BEEDIES 25
S.M.நூர்தீன் சாஹிப் ஜலால் குதிரெதரு
TRADE MARK
S.M. NOORDEEN HAUTINBEEDI
S.M. நூர்தீன் ஹாட்டின்பீடி
ஹாட்டின் பீடி வியாபாரம் திருச்சி
ஹாட்டின் பீடி
REGD. No. 178589
S.M.NOORDEEN SAHIB JALALKUDRI St. TRICHY


# அலை ஓசை

நடுநிலை நாளிதழ்

சென்னை 20 6 72 செவ்வாய் வெளியூர் 21 6 72 புதன்

PALAYAKAT COY PVT LTD MADRAS
REGD. TRADE MARK
80s x 80s
லுங்கிகளுக்கும் கைகுட்டைகளுக்கும்
எங்கள் சங்கு மார்க்
மதராஸ் பளயகாட் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
31, அரண்மனைக்காரன் தெரு 'சங்கு நிலயம்', சென்னை-1





அலை ஓசை மீது நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதலைக் கண்டித்து உழைக்கும் பத்திரிகையாளர்கள் சென்னை கோகலே மண்டபத்தில் நடத்திய கண்டனக் கூட்டத்தில் பழைய காங்கிரஸ் தலைவர் பி ராமச்சந்திரன். ஏ ஐ டி யு சி தமிழ்நாடு கிளைச் செயலாளர் கே எம் சுந்தரம், டாக்டர் ஹாண்டே விஜயலட்சுமி லட்சுமி நாராயணன் எம் பி பேசுகிறார்கள்

### வன்முறையை தடுக்க முடியாத

# ஐ. ஜி. ராஜிநாமா செய்வாரா?

## வேலூர் நாராயணன் சவால்

### என்னைக் கொல்வதற்கு திட்டம் தீட்டிவிட்டார்கள்

**சென்னை, ஜூன் 20— "என்னைக் கொல்வதற்கு திட்டம் தீட்டிவிட்டார்கள். எவ்வளவு நாள் நான் வாழ அனுமதிக்கிறார்களோ அவ்வளவு காலம்தான் நான் உயிர் வாழ்வேன். என் உயிர் பறிக்கப்படுவதற்கு முன் உண்மைகளைச் சொல்லி விட்டுச் சாவேன்" என்று வேலூர் நாராயணன் உருக்கமாகக் குறிப்பிட்டார்**

**வன்முறைச் சம்பவங்களைத் தடுக்க முடியாத போலீஸ் இன்ஸ்பெக்டர்ஜெனரல் அருள் இதை பகிரங்கமாகச் சொல்லி ராஜிநாமா செய்யவேண்டும் என்று வேலூர் நாராயணன் சவால் விடடார்.**

இவ்வாறு அவர் ராஜிநாமா செய்தால் உடனே தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சி ஏற்படும் என்று வேலூர் நாராயணன் குறிப்பிட்டார்

'அலை ஓசை' பத்திரிகை தாக்கப்பட்டதைக்கண்டித்து நேற்றுமாலை கோகலேமண்டபத்தில் அகில இந்திய உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளனத்தைச் சேர்ந்த சென்னை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கச் சார்பில் நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்தில் பேசுகையிலேயே வேலூர் நாராயணன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

கூட்டத்தில் பேசுவதற்காக நேராக மருத்துவமனையிலிருந்து தலையில் கட்டுடன் வந்த வேலூர் நாராயணனைக் கண்டதும் கூட்டத்தினர் கைதட்டி வரவேற்றார்கள்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

'அலை ஓசை' மீது என்ன கோபம் என்பது எனக்குப் புரியவில்லை இரண்டு ஆண்டு காலம் யோசித்து பெரியவர்களை கலந்து பேசித்தான் பத்திரிகையை ஆரம்பித்தேன். முதல்வரிடமும் இதைப் பற்றி பேசினேன். பத்திரிகைக்கு "அலை ஓசை" என்று பெயர் வைத்ததே முதலமைச்சர் தான்

நடுநிலையாக நடத்தலாம் என்று இருக்கிறேன் என்றேன் ஒருசாரார் ஆதரவு இல்லாவிட்டால் பத்திரிகை வளர்ச்சி பாதிக்கப்படுமே அதையும் பார்த்துக்கொள் என்றார். இப்படியெல்லாம் சொன்னவர் இன்று எப்படி எதிரியானார்?

### சின்ன அண்ணன்

கருணாநிதியை சின்ன அண்ணன் என்று முன்பு ஒருமுறை நேப்பியர் பூங்காவில் நடைபெற்ற கூட்டத்தில் ஆதித்தன் பேசினார் உடனே பக்கத்தில் இருந்த மதியழகன் இப்படிப்பட்ட பூசாரி வேலை செய்பவர்கள் எல்லாம் இங்கே வேண்டாம்' என்று ஏதோ உடம்பெல்லாம் தன்மானம் பொங்கி வழிவதாகக் காட்டிக் கொண்டார் இன்று என்ன நடக்கிறது? அவர் நடத்தும் பத்திரிகையான தென்னகத்தில் என்ன எழுதுகிறார்கள்? பக்கத்துக்குப் பக்கம் சின்ன அண்ணன் என்று எழுதுகிறார்கள்

நான் கருணாநிதியுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது கேட்டேன் 'தென்னகம்' எவ்வளவுஅச்சிடுகிறார்கள் தெரியுமா உங்களுக்கு என்று கேட்டேன் எவ்வளவு என்றார் திருமணப்பத்திரிகை கூட இரண்டாயிரத்திற்கு அதிகமிருக்கும் ஆனால் அதற்கும் குறைவு என்றேன் அப்படியா பத்தாயிரம் என்றார்களே என்றார் இப்படி யாசித்து அரசு விளம்பரம் பெறுகிறார்கள்

### யாசிக்கவில்லை

நானும் விளம்பரம் கேட்டேன் ஆனால் யாசிக்கவில்லை என்னுடைய பிறப்பு வளர்ப்புக்கு யாசிப்பது ஒத்து வரவில்லை நான் கட்சியில் இரண்டு பதவிகளைக் கேட்டேன், ஒன்று மேயர் பதவி மற்றொன்று அரசாங்க வக்கீல் பதவி, எனக்கு அந்தப் பதவியை கொடுத்தால் கலைஞர் பதவிக்கே ஆபத்து என்று தெரிந்ததும் எனக்கு அரசாங்க வக்கீல் பதவி கடைசி நேரத்தில் கிடைக்காமல் போயிற்று எல்லாரும் தனக்கு ஜால்ரா தட்டவேண்டும் என்று கருணாநிதி விரும்புகிறார் அவ்வளவு பெரிய ஜனநாயகவாதி நமது முதல்வர்.

பத்திரிகை ஆரம்பித்த இரண்டாம் நாளிலேயே விசுவாசி கெடுபிடி பயர்வு என்று 'அலை ஓசை' செய்தி வெளியிட்டிருந்தது அன்றே கருணாநிதி அலை ஓசைக்கு எதிரியாகி விட்டார்

## எம். ஜி. ஆர் நெடுஞ்செழியன் பட்ட அவதி

எனக்குமட்டும் பாதுகாப்பில்லை என்பதல்ல பிரதாப்சந்திரனுக்கு அஞ்சலி செலுத்தச்சென்றார் அமைச்சர் நெடுஞ்செழியன், அவருடைய காரையும் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். எம் ஜி ராமச்சந்திரன் சென்றார் வெளி நாட்டு பிரமுகர்கள் வந்தால் குண்டுகள் வெடித்து வரவேற்பார்களே. அதைப்போல சோடா பாட்டில்களை உடைத்து அங்கே வரவேற்றிருக்கிறார்கள்.

## அன்பழகன்

தலைவன் செத்துக்கிடக்கிறான் உனக்குசில்க் ஜிப்பா ஒரு கேடா என்று கேட்டிருக்கிறார்கள் அன்பழகனை அங்கே போகவேண்டாமென்று நெடுஞ்செழியன் சொல்லியிருக்கிறார் எனக்கே இந்தக் கதி என்றால் நீங்கள் அங்கே போகாதீர்கள் என்றாராம் அதனால் அன்பழகன் அங்கே போகவில்லை

செம்பியம் பகுதி போலீஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் போலீஸ்காரர்கள் அடிபட்டிருக்கிறார் இப்படி யாருக்கும் பாதுகாப்பில்லாத நிலையை கருணாநிதி உருவாக்கியிருக்கிறார் இனியாவது கருணாநிதி திருந்துவாரா என்பதுதான் நம் கேள்வி

### கருணாநிதி வருத்தம்

அலை ஓசை தாக்கப்பட்டது கண்டு எல்லோரும் வருத்தம் தெரிவித்தார்கள் முதல்வர் இதுபற்றி ஏதும் கருத்து சொல்லாததால் அலைஓசையில் கருணாநிதிகருத்து' என்று போட்டு வெற்றிடமாக விட்டிருந்தார்கள் உடனே முரசொலி அலுவலகத்தில் இருந்து தொலைபேசி மூலம் அலைஓசை இப்படி வெற்றிடம் விட்டு கேலி செய்திருக்கிறார்கள் என்று சொன்ன

(4-ம் பக்கம் பார்க்க)


### தையல் பிரிக்கப் பட்டது

அலை ஓசையின்மீது நடந்த தாக்குதலில் வேலூர் நாராயணன் தலையில் காயம்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார் அல்லவா? அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தில் தையல் போடப்பட்டிருந்தது

இன்று பிற்பகல் 1-45 மணிக்கு தையல் பிரிக்கப்பட்டது வேலூர் நாராயணன் விரைவில் ஆஸ்பத்திரியிலிருந்து வீடுதிரும்புவார்



தலையில் கட்டுடன் வேலூர் நாராயணன் பேசுகிறார்



கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள்கூட்டம்

### கவிஞர் கண்ணதாசன் பேச்சு

## வன்முறையைத் தடுக்க தமிழகத்தில் மத்திய போலீஸ் வரவேண்டும்

**சென்னை, ஜூன் 20 "தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதியை நிலை நாட்டிட தமிழ்நாட்டுப் போலீசார் மட்டும் போதாது மாவட்டம் தோறும் மத்திய ரிசர்வ் போலீஸ் படையை நிறுத்த வேண்டும்" என்று கவிஞர் கண்ணதாசன் கேட்டுக் கொண்டார்.**

**எங்காவது வன்முறை நடந்தால் மாநிலப் போலீசில் புகார் கொடுக்க வேண்டும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மத்திய ரிசர்வ் போலீஸ் படையிடம் புகார் கொடுத்தால் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள் இப்படித்தான் அரியாங்குப்பம் இடைத்தேர்தலில் நடைபெற்றது என்றும் கவிஞர் கண்ணதாசன் கூறினர்**

சென்னை உழைக்கும் பத்திரிகையாளர்கள் சம்மேளனத்தின் சார்பில் அலைஓசை தாக்கப்பட்டதைக் கண்டித்து கோகலே மண்டபத்தில் நடைபெற்ற பிரம்மாண்டமான கண்டனப் பொதுக் கூட்டத்தில் முழக்கமிட்ட கவிஞர் கண்ணதாசன் மேலும் பேசியதாவது:-

இங்கு பாசிச ஆட்சி நடக்கிறது என்று டாக்டர் ஹாண்டே கூறினார் ஜெர்மனி முதலிய நாடுகளில் நடைபெற்ற ஆட்சி போல வன்முறைகளை நம்பி ஆளுகிற ஆட்சி இங்கே நடைபெறுகிறது ஒரு ஜனநாயக நாட்டில் பத்திரிகைகள் அச்சுறுத்தப்படக்கூடாது சர்வாதிகார நாடுகளுக்கு அது உகந்ததாக இருக்கலாம் நாம் இருப்பது இந்தியா என்ற ஜனநாயக நாட்டிலா இல்லை தமிழ்நாடுதான் இந்தியாவா என்பதற்கு முடிவு கட்டியாக வேண்டும்

### பத்திரிகைகள் பயம்

இந்துவும் தினமணியும் முதலமைச்சர் கருணாநிதியைக் கண்டு பயப்பட்டன, பயப்படுகின்றன ஆனால் அலைஓசையைக் கண்டு முதலமைச்சர் பயப்படுகிறார் அந்த வகையில் அலைஓசைக்கு கிடைத்து இருப்பதுபெருமையே கருணாநிதியை பற்றி மற்றவர்களை விட நான் நன்கறிவேன்

19 3ம் ஆண்டு டால்மியாபுரப் போராட்டத்தின் போது ரெயிலில் உறங்கிக்கொண்டு இருந்த பால் வியாபாரம் செய்யும் இருவர் இறந்து விட்டனர் அந்தப் பிணத்திற்கு கறுப்பு சிவப்பு துண்டு போட்டு ஒரு பேட்டைக்குச் சதி ஐயோ கழகக்

(4-ம் பக்கம் பார்க்க)

நினைவு நாள் 20-6-72

அமரர்

M. மாயாண்டி நாடார்

அவர்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

மனைவியும் — மகன்களும்

சொர்ணம்மாள் எம். ராஜதுரை
எம். ராஜா எம். மாரியப்பன்
எம். சதாசிவம் எம். மதனகோபால்

# மாநில சுயாட்சி: இடது கம்யூனிஸ்ட் தலைவர் கேள்வி

**மதுரை, ஜூன். 20—மாநில சுயாட்சி கோரும் தி. மு. க.வினர் மாநிலங்களிடம் எந்தெந்த அதிகாரங்கள் ஒப்படைக்கப்படவேண்டும் என்று வரையறுத்துச் சொல்லட்டும் என்று இடதுசாரி கம்யூனிஸ்டு தலைவர் எ. பாலசுப்பிரமணியம் கூறினர்.**

தி. மு கழகத்தின் லட்சியம் மாநில சுயாட்சி என்று அதன் தலைவர் கருணாநிதியும் மற்றவர்களும் பேசி வருகிறார்கள் மாநில சுயாட்சி கொடுக்க வேண்டும் என்று தி மு கழகத்தினர் மாநாடுகளில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இது சம்பந்தமாக ராஜமன்னார் குழு என்ற குழுவை தி மு க அரசு அமைத்தது. அதன் பிறகும் என்னென்ன அதிகாரங்களை மாநில அரசுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தி மு கவினர் இதுவரை திட்டவட்டமாக அறிவிக்கவில்லை டெல்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொண்ட கருணாநிதியும் இதுபற்றி திட்டவட்டமாக அறிவிக்கவில்லை.

## தி மு க வுக்கு கேள்வி

தி மு க வினர் கேட்கும் மாநிலசுயாட்சியில் என்னென்ன அதிகாரங்கள் மாநிலங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கூறும்படி இடதுசாரி கம்யூனிஸ்டு தலைவர் ஏ பாலசுப்பிரமணியம் கேட்டு இருக்கிறார் அவர் கூறி இருப்பதாவது—

தி மு கழகத்தினர் மாநில சுயாட்சி மாநில சுயாட்சி என்று திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள் மாநிலங்களுக்கு மேலும் அதிகாரம் இருந்தால் மக்களுக்கு அதிகமான நன்மை செய்யமுடியும் என்று கூறிவருகிறார்கள்

ஆனல் எந்தெந்த அதிகாரங்களை மாநில அரசுகளிடம் ஒப்படைக்கவேண்டும் என்று இதுவரை தி மு க வினர் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை

உண்மையிலேயே மாநில சுயாட்சிக்குப் போராடுகிறவர்களாக இருந்தால் தி மு க வினர் என்னென்ன அதிகாரங்களை மாநிலங்களிடம் விடவேண்டும் என்று வரையறுத்துக் கூறட்டும் எங்கள் கட்சியைப் பொறுத்தவரை நாங்கள் இது பற்றித் திட்டவட்டமாக அறிவித்து விட்டோம் அதேபோல் தி மு க வினரும் அறிவித்தால்என்ன

இவ்வாறு பாலசுப்பிரமணியம் கூறினர்

# சேலம் விவசாய கிளர்ச்சி: 36 பேர் கைது

சேலம் ஜூன் 20—சேலம் நகரில் சர்வகட்சியினர் நேற்று ஊர்வலமாகப் போகும்போது 36 பேர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர்

சேலம் விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவாக சர்வ கட்சியினர் ஊர்வலம்நடத்தினார்கள்

இந்த ஊர்வலம் சேலம் போஸ் மைதானத்திலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று கலெக்டர் அலுவலகத்தை அடைந்தது

சேலம் மாவட்ட இந்திரா காங்கிரஸ் கமிட்டி செயலாளர் மு ராஜேந்திரன். பழைய காங்கிரசைச்சேர்ந்த பி தியாகராஜன், கு ராமமூர்த்தி(இந்திரா காங்கிரஸ்) சேலம் மாவட்ட இந்திரா காங்கிரஸ் இளைஞர் அணியைச்சேர்ந்த தங்கவேலு பாலு கணேசன் வலது கம்யூனிஸ்ட் ரேடர் ஆகியோர் உட்பட 36 பேர் கலெக்டர் அலுவலகம் முன்பு கைது செய்யப்பட்டார்கள் கைது செய்யப்பட்டவர்களை காவலில் வைக்கும்படிசேலம் மாவட்ட மாஜிஸ்திரேட் உத்தர விட்டார்.

# அலை ஓசை மீது தாக்குதல்: இந்திரா காங்கிரஸ் கண்டனம்

சேலம், ஜூன். 20— அலை ஓசை அலுவலகத்தை தி மு கழகத்தினர் தாக்கியதை யொட்டி, சேலம் மாவட்ட இந்திரா காங்கிரஸ்தலைவர்அர்த்தநாரீசுவர கவுண்டர், ராஜேந்திரன் ஆகியோர் கண்டனம் தெரிவித்து இருக்கிறார்கள்

இது போன்ற வன்முறை சம்பவம் மீண்டும் நடைபெற விடக்கூடாது இதற்கு அகில இந்தியரீதியில் பத்திரிகையாளர் சம்மேளனம் தக்க நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று அவர்கள் தங்களது அறிக்கையில் கூறியிருக்கிறார்கள்.

'அலை ஓசை' தாக்குதல்:

# சைதை காங்கிரஸ் கமிட்டி கண்டனம்

சென்னை, ஜூன் 20— சைதாப்பேட்டை தாலுகா காங்கிரஸ் கமிட்டி ஊழியர் கூட்டம் தா மு தனபால் தலைமையில் சென்னையை அடுத்த தாம்பரம் காமராஜ் சேவா சங்க கட்டிடத்தில்நடைபெற்றது

இக்கூட்டத்தில்'அலைஓசை, பத்திரிகை தாக்கப்பட்டதைக் கண்டித்து தீர்மானம் ஏகமனதாகநிறைவேறியது

சென்னை நகரில் செம்பியம் பகுதியில் தொழிலாளர்கள் இடையே ஏற்பட்டமோதலை அடுத்து அமைதி ஏற்பட்டுவிட்டது என்று பொறுப்பான காவல் துறை அதிகாரி அறிவித்தபின்சமூக விரோதக்கும்பல் ஒன்று அலை ஓசை பத்திரிகை ஆபீசையும் மேலூர் நாராயணனையும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக திட்டமிட்டு தாக்கியதைக்குறித்து அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் ஜனநாயகத்தை படுகொலை செய்யுமளவுக்கு செயல்படுகிறது

ஆகவே தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்கு மத்தியஅரசு பொறுப்பேற்று தமிழகத்தில் ஜனநாயகம் நிலைபெறச் செய்ய தக்க நடவடிக்கைகள் உடனே எடுக்க வேண்டுமென்று இத்தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது

இந்த தீர்மானம் பற்றிய விவரத்தை மத்திய அரசுக்கு தனபால் அனுப்பியுள்ளார் மேலும் கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன

# சென்னையில் பார்வர்டு பிளாக் மத்திய குழு கூட்டம்

சென்னை, ஜூன். 20— அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் மத்திய கமிட்டிக் கூட்டம் இம்மாதம் 29, 30 தேதிகளில் சென்னையில் கூடுகிறது இக்கூட்டத்தில் மற்ற கட்சிகளுடன் பார்வர்டு பிளாக்கட்சிகொண்டுள்ள உறவு பற்றி விவாதிக்கப்படும் கட்சியின் எதிர்காலம் பற்றியும் கூட்டம் விவாதம் நடத்தும் இத்தகவலை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தற்காலிகதலைவர் பி கே மூக்கையா தேவர் நிருபர்களிடம் கூறினர்.

# போஸ்டல் ஆடிட் ஊழியர்கள் மறியல்

சென்னை, ஜூன். 20— சென்னை எழும்பூரில் உள்ள போஸ்டல் ஆடிட் ஆபீசைச் சேர்ந்த ஊழியர்கள் தங்கள் அலுவலகத்தின் முன்பாகவெளியில் உட்கார்ந்து மறியல் போராட்டம் நடத்தினர்கள்.

திருவனந்தபுரம் அக்கவுண்டன்ட் ஜெனரல் அலுவலகத்தைச் சேர்ந்த திருவிக்ரமன்பிள்ளை, பி. டி. தாமஸ் ஆகியோர் வேலை நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து இந்தப் போராட்டத்தை போஸ்டல் ஆடிட் ஆபீஸ் ஊழியர்கள் நடத்தினர்கள்.

அகில இந்திய ஆடிட் ஊழியர்களின் தொழிற் சங்கம் சார்பில் நடத்தப்பட்ட இப்போராட்டத்தில் தொழிற் சங்கத் தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அலை ஓசை மீது தாக்கு

# கல்வி நிலையம் கண்டன தந்தி

திருவனந்தபுரம், ஜூன் 20 அலை ஓசை மீது தாக்குதல் நடத்தப் பட்டது அல்லவா? அதற்கு திருவனந்தபுரத்தில் உள்ள தங்கையா மார்க்சிஸ சித்தாந்த கல்வி நிலையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

# மின்சார கட்டணத்தில் சலுகை: கருணாநிதி திடீர் அறிவிப்பு

**சென்னை, ஜூன். 20— விவசாயிகளின் மின்கட்டணத்தில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் மின்சாரம் பயன்படுத்துவோருக்கு பழைய கட்டணம் வசூலிக்கப்படும் என்று முதலமைச்சர் கருணாநிதி அறிவித்து இருக்கிறார்.**

**விவசாய வருமான வரியிலும் இவ்வளவு ஏக்கர் என்று குறிப்பிடாமல், காம்பவுண்டிங் முறைப்படி வரிவசூல் செய்யப்படும் என்றும் அவர் அறிவித்தார்.**

விவசாயிகள் மின்சாரக் கட்டணத்தை தமிழக அரசு உயர்த்தியதை எதிர்த்தும் விவசாயவருமான வரியை ரத்து செய்யும்படியும் மற்றும் 10 அம்சக் கோரிக்கைகளுக்காகவும் தமிழக முழுவதும் தொடர்ந்து விவசாயிகள் பெரும் போராட்டம் நடத்தி வருகிறார்கள்

இந்தப் போராட்டத்தின் எதிரொலியாக சென்னையில் முதலமைச்சர் கருணாநிதி நேற்று அவசர அவசரமாக மின்சார வாரியத் தலைவர்கள் அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார்



## கருணாநிதி அறிவிப்பு

அதன்பின் அவர் அறிவித்ததாவது

சென்ற ஏப்ரல் மாதக்கடைசி வாரத்தில் கோவைமாவட்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விவசாயப்பிரதிநிதிகளையும் நான் சந்தித்த போது பரிசீலிப்பதாக உறுதி அளித்தவாறும் சென்ற வாரம் நான் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டவாறும் ஸ்லாப் முறை கட்டணவிகித அடிப்படையில் மின்கட்டண சலுகை பற்றியும் விவசாய வருமான வரியில் கணக்கு வைப்பதில் காணப்பட்ட சிக்கலைத் தவிர்ப்பது பற்றியும் கீழ் கண்ட முடிவுகளை அறிவிக்கிறேன்

1 ஐந்து குதிரை சக்தி ஹார்ஸ்பவர் வரையில் மின்சாரம் உபயோகப்படுத்துகிற சிறிய விவசாயிகளுக்கு மாதந்தோறும் முதல் 200 யூனிட்களுக்கு 12 காசு

200 யூனிட்டுகளுக்கு மேல் பழைய கட்டணமான 10.8 காசு

(2) ஐந்து குதிரை சக்திக்கு (ஹார்ஸ் பவர்) மேல் மின்சாரம் உபயோகப்படுத்துகிற விவசாயிகளுக்கு மாதத்தில் முதல் 400 யூனிட்டுகளுக்கு 12 காசு மாதம் 400-க்கு மேற்பட்ட யூனிட்டுகளுக்கு பழைய கட்டணம் 10.8 காசு

## விவசாய வருமான வரி சலுகை

"விவசாய வருமான வரியில் இப்பொழுது 30ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் கம்பவுண்டிங்முறையில் வரி கட்டலாம் என்றிருப்பதை இனிமேல் ஏக்கரா வரம்பு ஏதுமின்றி கம்பவுண்டிங் செய்துகொள்ள சலுகை அளிக்கப்படும் நான் முன்பே கூறியிருப்பதைப்போல சட்டசபையில் இதற்கான மசோதா கொண்டுவரப்படும் இந்த ஏற்பாட்டின் மூலம் கட்டாயமாகக்கணக்கு காட்டவேண்டும் என்பதில்லை கணக்கு வைத்துக் கொண்டு காட்ட விரும்புகிறவர்கள் கணக்குக் காட்டலால்'' என்று கருணாநிதி விளக்கினர்

## ஜூன் மாதம் முதல்...

அறிவிக்கப்பட்டுள்ள புதிய மின் கட்டணச் சலுகைகள் ஜூன் மாத மின்சார உபயோகக் கணக்கெடுப்பின்படி (ரீடிங்) அமுலுக்கு வரும் இந்தச் சலுகைகள் தமிழகம் முழுவதற்க்கும் பொருந்தும் என்றும் அவர் சொன்னர்.

'மின் கட்டணம் யூனிட்டுக்கு 12 காசு வசூலித்தாலேயே இப்போது மின் வாரியத்திற்கு 14 கோடி ரூபாய் ஆண்டொன்றிற்கு நஷ்டம் வந்துகொண்டிருக்கிறது அறிவிக்கப்பட்ட புதிய சலுகை காரணமாக இன்னும் எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்பது கணக்கிடப்பட வேண்டும்'' என்று நிருபர் கேள்விக்குப் பதிலளித்து கருணாநிதி சொன்னர் விவசாய வருமான வரி முடிவு மூலம் கணக்குக் காட்ட வேண்டும் என்ற சிக்கல் நீக்கப்பட்டிருக்கிறது என்ருர்

## கடன்வசூல் கெடுபிடி

மின் கட்டணச் சலுகை மட்டுமின்றி கெடுபிடி வசூல் ஜப்தி நடவடிக்கை போன்றவைகளை ரத்து செய்வது போன்றவற்றையும் அரசு செய்தால்தான் விவசாயிகள் போராட்ட செயல் குழுவினர் திருப்தி அடைவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளதை முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு வந்து நிருபர் கேட்டார்

''வறட்சிப் பகுதிகளில் கடன்கள் வசூலுக்கு தவணை கொடுத்தல் வஜா செய்தல் ஆகிய காரியங்களில் அரசாங்கம் அனுதாபத்துடன் அக்கறை காட்டி வருகிறது'' என்று கருணாநிதி பதிலளித்தார்,

செக் நாட்டு பல்கலைக்கழகத்தில்

# இந்திராவுக்கு டாக்டர் பட்டம்

பிராக், ஜூன். 20-செக் கோசுலோவேகியா நாட்டுப் பல்கலைக்கழகம் பிரதமர்இந்திராவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கி சிறப்பித்தது

பிரதமர் இந்திரா செக் நாட்டில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார் செக் நாட்டின் தலைநகரான பிராகில் சார்லஸ் பல்கலைக்கழகம் இருக்கிறது இதுஐரோப்பாக்கண்டத்திலேயே மிகவும் பழைய பல்கலைக்கழகம் ஆகும்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் பிரதமர் இந்திராவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது விழாவுக்கு செக் நாட்டு அரசியல் தலைவர்களும் கல்வி நிபுணர்களும் வந்திருந்தார்கள்

# கோவையில் போலீஸ் தடை மீறி ஊர்வலம்: 200 பேர் கைது

**கோவை, ஜூன். 20— கோவையில் போலீஸ் தடை உத்தரவை மீறி ஊர்வலமாகச் சென்ற 80 பெண்கள் உட்பட 200 விவசாயிகள் நேற்று கைது செய்யப்பட்டார்கள்.**

கோவை நகரில் நேற்று 144தடை உத்தரவு அமுலில் இருந்தபோதிலும் 2 ஆயிரம் விவசாயிகள் ஊர்வலமாகச் சென்றனர். இவர்களில், சுமார் 80 பெண்கள் உட்பட 200 விவசாயிகளை கோவை ஆஸ்பத்திரிக்கு எதிரே திருச்சி ரோடில் போலீசார்விரைந்து வந்து கைது செய்தனர்

## முன்னாள் எம்.எல்.ஏ. கைது

முன்னாள் எம் எல் ஏ எல்லம நாயுடு (பழைய காங்) திருமதி தேவி, பழனிசாமி, மாணவர் தலைவர் சந்திரமோகன் ஆகியோர் ஊர்வலத்துக்குத் தலைமைதாங்கினர். வெற்றி கிட்டும் வரை போராடுவோம் அடக்குமுறைக்கு பணியமாட்டோம் என்ற கோஷங்களுடன் சங்க கொடியை எடுத்துக் கொண்டு விவசாயிகள் ஊர்வலமாகக் கிளம்பினர்

## போலீஸ் மயம்

வ உ சி பூங்காவிலிருந்து ஊர்வலத்தை நடத்தசங்கம் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தது ஆனல் பூங்காவில் இரும்பு தொப்பியணிந்த போலீசார் எல்லாப் பக்கங்களிலும் நின்று கொண்டிருந்தனர் எனவே விவசாயிகள் திருச்சி ரோடில் கூடினர்

விவசாயிகள் சங்க அலுவலகம் காங்கிரஸ் அலுவலகம் வலது கம்யூனிஸ்டு அலுவலகம் தொழிற்சங்க அலுவலகங்கள் முன்பு எங்கு பார்த்தாலும் போலீஸ் மயமாகவே காட்சியளித்தது

## மாணவர்கள் ஸ்டிரைக்

விவசாயிகள் போராட்டத்துக்கு ஆதரவாகவும், கைது செய்யப்பட்ட விவசாயிகளை விடுதலை செய்யக்கோரியும். நிறுவனங்களில் அரசியலைப் புகுத்தக்கூடாது என்று கண்டித்தும் கோவையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ளபள்ளி கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள்

கோவை நகரம் அன்னூர் இடிகரை பெரியநாயக்கன் பாளையம் எஸ்'எஸ் குளம் ஆகிய இடங்களில் இந்த வேலை நிறுத்தம் நடந்தது.

## மதுரையில் தீவிரம்

மதுரைஜில்லா இந்திரா காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகக்குழு திருமங்கலத்தில் கூடியபோது இதர கட்சிகளின் ஒத்துழைப்புடன் மதுரை ஜில்லாவிலுள்ள தாலுகாக்களனைத்திலும் விவசாயிகளின் கிளர்ச்சியை தீவிரப்படுத்துவதென்று தீர்மானித்தது

இதுவரை பழனி திண்டுக்கல் தாலுக்காக்களில் மட்டும் கிளர்ச்சி நடந்து வந்தது

## கடலூர்

எஸ் ராதாகிருஷ்ணன் எம் பி தலைமையில் சர்வகட்சிக் கூட்டம்நடந்ததுவதுகோவை விவசாயிகளின் கிளர்ச்சியை தெனஞற்காடு விவசாயிகள் ஆதரிப்பது என்றும் கடலூர் ஜூன் 26 ல் ஆட்சேப ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்துவது என்றும் கலெக்டர் அலுவலகம் முன்பு ஜூன் 27 ல் விவசாயிகள் மறியல் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது

## சிறையில் கொடுமை

தண்டனை பெற்ற சுமார் 118 பேர் மதுரை மத்ய சிறையிலிருந்து நேற்று திருச்சி மத்யசிறைக்கு மாற்றப்பட்டனர்

தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் சி முத்துசாமி கவுண்டர் இன்று திருச்சியில் நிருபர்களிடையே பேசுகையில் இக்காவற் கைதிகள் நேற்று மாலை மதுரைரெயில் நிலையத்துக்கு அழைத்துவரப்பட்டதாகவும் உணவும் எதுவும் தரப்படவில்லை என்றும் கூறினர் மதுரையிலிருந்து ரயிலில் இவர்கள் இன்று அதிகாலை திருச்சிக்கு அழைத்துவரப்பட்டனர்

இவர்களில் பலருக்குகண் நோய் என்றும் ஆனல் சிகிச்சை எதுவும் அளிக்கப்படவில்லை என்றும் முத்துசாமி கவுண்டர் குற்றஞ்சாட்டினர்

முத்துசாமி கவுண்டர் ராஜ்ய விவசாயிகள் சங்க உதவி காரியதரிசி வி கே ராமசாமி, சோஷலிஸ்ட் கட்சித்தலைவர் எம்மீனாட்சிசுந்தரம்தமிழரக்கட்சிபொது காரியதரிசி ஸி. ஆர். சந்தானம்ஆகியோர்திருச்சிமத்திய சிறையில் என் எஸ் எஸ் மன்றாடியாரையும் மற்றவர்களையும் சந்தித்தனர்

## நெல்லை

திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் அலுவலகம் முன்பு மறியல் செய்த 30 நபர்கள் கைது செய்யப்பட்டனர்

தென்காசி தாலுகா ஆபீஸ் முன்பு மறியல் நடத்திய 34 விவசாயிகள் கைதுசெய்யப்பட்டனர் மறியல் செய்வதற்கு முன்னல் அவர்கள் ஊர்வலமாக வந்தனர்

சங்கரன்கோவில் தாலுகா ஆபீஸ் முன்பு மறியல்செய்த 34 பெண்கள் உள்ளிட்ட 40 விவசாயிகள் கைது செய்யப்பட்டனர்

## சிவகிரி

சிவகிரி தாலுகா ஆபீஸ் முன் மறியல் செய்த நாமகிரி பஞ்சாயத்து தலைவர் ஜனகர் ராஜா உட்பட 84 பேர் கைது செய்யப்பட்டனர்

இந்த தாலுகாவில் இது வரை மொத்தம் 372 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்

## சிறையில் இடமில்லை

நெல்லை ஜில்லாவில் பல்வேறு பகுதிகளில் அரசு அலுவலகங்கள் முன்பு மறியல் செய்ததற்காக கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் காவலில் உள்ள சுமார் 1000 விவசாயிகள் திறந்த வெளியில் உள்ளனர். சிறைகள் போதுமான எண்ணிக்கையில் இல்லாததே காரணம்.

இத்தகவலை ஜில்லா விவசாயிகள் சங்க பொதுக் காரியதரிசி ராஜ் தெரிவித்தார் குறைந்த பட்சம் அதிகாரிகள் இக் கைதிகளுக்காக பந்தலாவது போட வேண்டும் என்றும் இல்லாவிடில்காவற் கைதிகள் உண்ணாவிரதம் துவக்க நேரும் என்றும் அவர் சொன்னர்.

## சின்னதுரை அறிக்கை

விவசாயிகள் பிரச்சினை தீர கைது செய்யப்பட்ட அனைவரையும் விடுதலை செய்து அவர்களுடன் பேச்சு நடத்துவது ஒன்றே வழி என்று சோசலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பி எஸ் சின்னதுரை ஒரு அறிக்கையில் கூறி இருக்கிறார்

விவசாயிகள் பிரச்சினை தீரும் வரை அரசு கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்றும் அவர் கூறி இருக்கிறார் விவசாயிகளின் கோரிக்கைகளில் மத்திய அரசும் சம்பந்தப்பட்டு இருப்பதால்தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்களையும் உடன்வைத்து இது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் சின்னதுரைகோரிஇருக்கிறார்

## ஏ சுப்பிரமணியம் கண்டனம்

இந்திரா காங்கிரஸ் எம் எல் ஏ வும் அகில இந்திய எச் எம் எஸ் தொழிற் சங்கத் தலைவருமான ஏ சுப்பிரமணியம் ஒரு அறிக்கையில் "கோவைநகரில்விவசாயிகள் மட்டுமன்றி, மாணவர்கள் பஸ் பிரயாணிகள் யார் சென்றாலும் அவர்கள் போலீஸ் அடக்கு முறைக்கு ஆளாகிறார்கள் ஆசிரியரோ, வியாபாரியோ, தொழிலாளியோ எவர் சென்றாலும் சிறைப்பிடிக்கப்படுகிறார்கள் இந்த அடக்கு முறையை ஜனநாயக சக்திகள் அனைத்தும் முறியடிக்க வேண்டும்'' என்று அதில் கூறி இருக்கிறார்.

## கல்யாண சுந்தரம் கண்டனம்

முதலமைச்சர் கருணாநிதி அறிவித்துள்ள மின் கட்டண சலுகை என்பது சலுகையே அல்ல விவசாயிகளின் கோரிக்கைகளை இது நிறைவேற்றவில்லை என்று நடவடிக்கைக் குழு உறுப்பினரும் தமிழக வலது கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியுமான கல்யாணசுந்தரம் எம் பி அறிவித்துள்ளார் 60,000க்கு மேற்பட்ட விவசாயிகள் சிறையில் இருக்கிறார்கள் முக்கியமான தலைவர்களெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் இந்நிலையில் விவசாயிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தாமலும் நடத்த விரும்பாமலும் தானகவே முதலமைச்சர் அறிவித்துள்ள முடிவு விவசாயிகளிடையே கொதிப்பை ஏற்படுத்துமே அல்லாமல் சுமுகமான ஒரு தீர்வுக்கு வர வழி வகுக்காது என்று அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

(7 ம் பத்தி பார்க்க)

# பரமக்குடியில் மாணவர்கள் ஸ்டிரைக்

பரமக்குடி ஜூன் 20— பரமக்குடியில் உள்ள ராஜா சேதிபதி அரசினர் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஜூன் 19-ந் தேதிமுதல் ஸ்டிரைக்செய்துவருகிறார்கள்

புதிய தலைமை ஆசிரியரை நியமிக்கக்கோரி இந்த ஸ்டிரைக் நடைபெறுகிறது இம்மாதம் 1-ந்தேதி பள்ளி திறக்கப்பட்டது

# டாங்கே மாஸ்கோ பயணம்

புதுடெல்லி, ஜூன்.20- வலது சாரிக் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்கள் கொண்ட ஒரு தூதுக்குழு ஒன்று மாஸ்கோவுக்குப் புறப்பட்டது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின்மத்திய கமிட்டியின் அழைப்பின் பேரில் இந்தத் தூதுக்குழு மாஸ்கோ போகிறது

கட்சித்தலைவர் எஸ் ஏ டாங்கே தலைமைவகிக்கும் இக்குழுவில் பொதுச்செயலாளர் ராஜேஸ்வரராவ் பூபேஷ் குப்தா என் கே கிருஷ்ணன் ஆகியோர் இடம்பெற்றிருக்கிறார்கள்.

# தூங்கிய கணவன் குத்திக் கொலை: மனைவிகளுக்கு சிறை

**சென்னை, ஜூன். 20— தூங்கிக் கொண்டிருந்த கணவனைக் கத்தியால் குத்திக் கொன்ற அவரது இரண்டு மனைவிகளுக்கும் 3 ஆண்டு கடுங்காவல் ஜெயில் தண்டனை விதிக்கப்பட்டது.**

இதுபற்றி கோர்ட்டில் கூறப்பட்டதாவது:

தருமபுரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரியைச் சேர்ந்தவர் சந்திரன் இவரது இரண்டு மனைவிகள் பழனியம்மாள் ராமாயி

சந்திரன் எந்த வேலைக்கும் போகாமல் எந்நேரமும் குடித்துவிட்டு வீட்டில் படுத்துக் கிடப்பார் அதனல் மனைவிகள் இரண்டு பேரும் வேலை செய்து தங்கள் சம்பளத்தில் குடும்பத்தை நடத்தவந்தார்கள்

வேலைக்கு போய்வரும் தன் மனைவிகளிடம் பணத்தை வாங்கி குடித்துவிட்டு குடிபோதையில் கலாட்டா செய்வதை வழக்கமாக கொண்டிருந்தார் சந்திரன்.

சம்பவத்தன்று நன்ருகக் குடித்துவிட்டு வீட்டு கட்டிலில் படுத்திருந்த சந்திரன் பழனியம்மாள் ராமாயி இருவரையும் அழைத்து கடையில் போய் பீடி வாங்கி வரச் சொன்னர்கள்

இதற்குஅவர்கள்மறுக்கவும் உடனே பக்கத்திலிருந்த அரிவாளை எடுத்துக் காட்டி இருவரையும் கொலை செய்வதாக மிரட்டினர்

இதனல் மனைவிகள் இருவரும் பயந்துபோய் அலறியடித்துக்கொண்டு வீட்டை விட்டு ஓடி அருகில் வயலில் போய் பதுங்கி இருந்தார்கள் வயலில் பதுங்கியிருந்துவிட்டு இரவு வெகு நேரம் கழித்து இருவரும் வீடு திரும்பினர்கள் அந்நேரம் சந்திரன் கட்டிலில் குடிபோதையில் படுத்திருந்தார்

உள்ளே நுழைந்த இருவரும்தம்கணவனைத்தீர்த்துக் கட்டுவதே சரி என்ற முடிவுக்கு வந்து உடனே பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த அரிவாளை எடுத்து சந்திரனின் மார்பிலும் வயிற்றிலும் பல இடங்களில் வெட்டிக் கொன்ருர்கள்

தருமபுரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்த இவ் வழக்கில் கணவனை கொலை செய்த குற்றத்துக்காக மனைவிகள் இருவருக்கும் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்புக் கூறப்பட்டது

பின் பழனியம்மாள் ராமாயி இருவரும் இது சம்பந்தமாக சென்னை ஐகோர்ட்டில் அப்பீல் செய்தனர்

ஐகோர்ட்டில் நீதிபதி கே எஸ் வெங்கட்ராமன் கே நாராயணசாமி முதலியார் ஆகியோரின் முன்னிலையில் இவ்வழக்குவிசாரணைக்கு வந்தது

விசாரணையில் பழனியம்மாள், ராமாயி இருவருக்கும் நீதிபதிகள் தண்டனையை ஊர்ஜிதம் செய்தார்கள்

இருந்தாலும் குற்றவாளிகள் மீது அனுதாபம் காட்டி அவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஆயுள் தண்டனையை மூன்ருண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைக்க நீதிபதி சிபாரிசு செய்தார்.

(4 ம் பத்தி தொடர்ச்சி)


எட்டாவது உதவி சிட்டி சிவில் கோர்ட், சென்னை.

O. S. நிர் 809 OF 1972

தி கார்டியன் சிட் பண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 30, ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு, சென்னை-2

—வாதி

1 இ ஜே பால், செக்யூரிட்டி ஆபீசர்

Vs

2 என் பி பிலிப்போஸ் எஞ்சினீயரிங் அசிஸ்டெண்ட்

3 எம் எஸ் கணேசன் கன்ஸ்டிரக்ஷன் எஞ்சினீயர் —மூவரும் டன்லப் பேக்டரி, அம்பத்தூர், சென்னை-53 ஊழியர்கள்

—பிரதிவாதிகள்

ரூபாய் 3,150/-ஐ வட்டியுடனும்,செலவுடனும் திரும்பிப் பெறுவதற்கான மேற்படி தாவா 23-6-72-ந் தேதி காலை11மணிக்கு எட்டாவது உதவி சிட்டி சிவில் கோர்ட், சென்னை முன்பு விசாரணைக்கு வருகிறது பிரதிவாதிகள் மேற்படி தேதியில், மேற்படி நேரத்தில், மேற்படி கோர்ட்டில் ஆஜராகத் தவறினல் தாவா எக்ஸ்-பார்ட்டியாக கருதப்படும்.

டேனியல் உமன்
வாதியின் வக்கீல்



சுமால்காசஸ் கோர்ட் சென்னை.

சூட் நிர். 451 of 1972

துவாரகதாஸ் அண்ட் கம்பெனி பிரைவேட் லிமிடெட் —வாதி

vs.

அருளப்பதேவர்—பிரதிவாதி

அருளப்ப தேவர், 132. அனூர் நெடுஞ்சாலை சென்னை-21.

தங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு டெலிவரி செய்யப்பட்டபொருளுக்கான செலவு தொகையையும், ரூ. 256-85 யும் பெறுவதற்கான தாவாவையொட்டி, தாங்கள் சுமால் காசஸ் கோர்ட் 3வது ஜட்ஜு முன்பு 22—6—72-ந் தேதி ஆஜராக வேண்டும் என்பதை இந்த நோட்டீசின் மூலம் அறியவும். தாங்கள் அப்படி கோர்ட்டில் ஆஜராகத் தவறினல் தாவா எக்ஸ்-பார்ட்டியாக கருதப்படும்

எச். கிஷோர்
வாதியின் வக்கீல்

# ‘அலை ஓசை’ மீது தாக்குதலுக்கு கண்டனம்



## நடுநிலை ஏடுகளைத் தாக்குவதை மக்கள் அனுமதிக்கக் கூடாது

### பக்தவத்சலம் பேச்சு

சென்னை, ஜுன். 20-- “செய்திகளை திரிக்காமல் மறைக்காமல் உள்ளதை உள்ளபடி வெளியிடும் ‘அலை ஓசை’ போன்ற நடுநிலை ஏடுகள் தாக்கப்படுவதை பொதுமக்கள் இனியும் அனுமதிக்கக் கூடாது” என்று முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் வேண்டுகோள் விடுத்தார்.



தமிழக முன்னாள் முதலமைச்சர் எம் பக்தவத்சலம் பேசியதாவது:—

பத்திரிகை படிப்போரின் எண்ணிக்கை தமிழகத்தில் தான் அதிகம் என்ற பெருமை இருக்கிறது நடுநிலையுடன் நல்ல செய்திகளை தரமான வகையில் வெளியிடும் ‘அலை ஓசை’ பன்னெடுகாலம் வாழ வேண்டும் குண்டர்களால் தாக்கப்பட்ட வேலூர் நாராயண இன்னும் பல்லாண்டு வாழ வேண்டும் என்று நான் விரும்புகிறேன் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன்.

#### முதல்வருக்கு கோபம்

பத்திரிகை அலுவலகத்தை மூன்றுமுறை தாக்கி இருக்கிறார்கள் கார்களைகொளுத்தி இருக்கிறார்கள். போலீசார் உடனே விரைந்து வந்து தக்க நடவடிக்கை எடுக்கவில்லை, இவ்வளவு பலமான முறையில் தாக்குதல் நடத்தப்பட்டு இருக்கிறது போலீசார் நடவடிக்கை எடுக்காமல் சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்து இருக்கிறார்கள். பின்னர் புகார் ஏன் கொடுக்கவேண்டும் என்று கேட்க விரும்புகிறேன்! உதவி கோரியபோது ஓடிவராத போலீசில். இவ்வளவு வன்முறைகளும் ஏற்பட்டபின் புகார் கொடுத்து பலன் என்ன?

#### சதி செய்த சண்டாளர்

இந்த வன்முறைக்கு யார் சதி செய்தார்கள் அந்தச் சண்டாளர்கள் யார்? அந்தச் சமுதாய விரோதிகளை இது வரை ஏன் போலீசார் கண்டு பிடிக்கவில்லை? அலை ஓசை தாக்கப்பட்டதற்கு காமராஜர் அனுதாபம் தெரிவித்தார் அது எப்படி அவர் அனுதாபம் தெரிவிக்கலாம்என்று முதலமைச்சர் கருணாநிதிக்கு மூக்கிற்கு மேலே கோபம் பொத்துக் கொண்டு வருகிறது ஜனநாயகத்தைப் பற்றி வாய் கிழிய பேசும் தி மு கழகத்தினரின் ஆட்சியில் இப்படி எங்கு பார்த்தாலும் தவறு ஊழல் வன்முறை நடக்கிறதே என்று கூறினால் நீ தவறு செய்யவில்லையா என்று கருணாநிதி கேட்கிறார் நான் என்ன எங்கே தவறு செய்துவிட்டேன் என்று கேட்டால் நீ செய்தால் என்ன செய்யாவிட்டால் என்ன உன் முப்பாட்டன் தவறு செய்து இருக்கிறான் என்று முதலமைச்சர் கூறுகிறார். இதுதான் முறையா என்று கேட்க விரும்புகிறேன்.

#### ஜனநாயகத்திற்கு ஆபத்து

அலை ஓசை பத்திரிகை எந்த ஒரு அரசியல் கட்சியையும் சாராமல் பணிபுரிந்து வருகிறது தலையங்கம் கூட எழுதுவதில்லை நடு நிலையுடன் நல்ல தரமான செய்திகளை வெளியிட்டு வருகிறது ரோட்டில் செல்லும்போது வயதான ஒருவர் மூர்ச்சை அடைந்தார். பின்னர் மரணம் அடைந்தார் அதைப்போய் பட்டினிச்சாவு என்று சில எத்தர்கள் நடத்தும் பத்திரிகைகளில் முன்பெல்லாம் செய்தி போடுவார்கள் விசாரித்துப் பார்த்தால் அவர் பட்டினியால் செத்து இருக்கமாட்டார் என்று தெரியவரும் இம்மாதிரி செய்திகளை அலைஓசை வெளியிடுவது இல்லை அலைஓசை மீது தாக்குதல் மேலும் நீடித்தால் அது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது பொதுமக்கள் இம்மாதிரி வன்முறைச்சம்பவங்களை இனியும் நடைபெற அனுமதிக்கக்கூடாது இவ்வாறுபக்தவத்சலம் பேசினார்.

## “துக்ளக்” ஆசிரியர் சோ கண்டனம்

கூட்டத்தில் துக்ளக் ஆசிரியர் ‘சோ’ பேசுகையில் கூறியதாவது

இன்னும் தாக்கப்படாத சோ என்று என்னை அறிமுகப்படுத்தினர் தாக்கினால் தாங்கமாட்டேன் என்றோ என்னவோ உறவுக்காரர் என்பதால் வேலூராருக்கு கைகொடுத்திருக்கிறார்கள் போலும்

வேலூராரை கொல்லுவதற்கு திட்டம்போட்டுவிட்டார்கள் என்றார்கள் திமுகவினருக்கு திட்டம் போட்டு எதையும் செய்யத் தெரியாது அதனால் நிச்சயமாக கொல்லமாட்டார்கள். சொன்னதையும் செய்ய மாட்டார்கள். வெறித்தனமான செயலைத்தான் வெற்றிகரமாகச் செய்வார்கள்.

பத்திரிகை போக்குகள் மாறவேண்டுமானால் திமுக தம்பிகள் தளபதிகளாக வேண்டும் என்று கருணாநிதி பேசியிருக்கிறார் இதைப் பார்க்கும் போது பூட்டோவின் ஞாபகம்தான் எனக்கு வருகிறது இங்குள்ள போலீசை நான் நம்பவில்லை அவர்களைப் பார்த்து பரிதாபப்படுகிறேன் இட்லரின் மறுபிறப்புதான் இங்கு உருப்பெற்று வருகிறது

உண்மை பேசினால் நீங்கள் பிழைக்க முடியாது கறுப்பு சிவப்புத் துண்டு போட்டிருந்தால் பிழைக்கமுடியும்,

#### தைரியமில்லை

இங்குள்ள பத்திரிகைகளுக்கு தைரியமில்லை தைரியம் பெறுதவரை உருப்படபோவதுமில்லை இப்படி தைரியம் இல்லாமல் இருப்பது கேவலம் அவமானம் இதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்.

அலைஓசை தாக்கப்பட்டது பற்றி இப்படி கூட்டம் போட்டு கண்டிப்பது மட்டும் போதாது, போலீசை நம்பாமல் நாமே நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் இதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

## டாக்டர் ஹாண்டே



இங்கு நடப்பது ஒரு பாசிச ஆட்சி இதை நான் சட்ட சபையிலேயே சொல்லியிருக்கிறேன்

தனக்கு துதி பாடாத பத்திரிகைகளை அழிக்க கருணாநிதி நினைக்கிறார் மானங்கெட்டமுறையில் தந்தி. மாலைமுரசு ஜால்ரா தட்டுகிறது ஹிந்து பத்திரிகையும். எக்ஸ்பிரஸ் பத்திரிகையும் ஏன் இப்படி ஜால்ரா தட்ட வேண்டும் அதற்குள்ள பாரம்பரியம் என்ன ஆயிற்று கருணாநிதியைப் பற்றி செய்தியை நிராகரித்து ஒதுக்கி விடுங்கள் வெள்ளைக்காரனை எதிர்த்ததை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள்.

அலை ஓசை தர்க்கப்பட்டதால் அதனுடைய விற்பனை இரண்டு லட்சமாக உயரும் இதனால் தந்தி, மாலைமுரசு, முரசொலி விற்பனைகுறையும்

தங்களுக்குத்தெரியாமலேயே தங்களை அழித்துக் கொள்கிறார்கள்

இப்படிச் செய்வதால் இங்கொரு பங்களா தேசை உரு

(4-ம் பத்தி பார்க்க)

(2-ம் பத்தி தொடர்ச்சி)


வாக்க நினைக்கிறார்கள் இவர்களை உடனே டெல்லி கண்காணிக்கவேண்டும் இங்கு நகர சுற்றுப்புறங்களில் நடைபெறும் அநீதியை உடனே தடுத்து நிறுத்தவேண்டும்

செத்துப் போனவர்களுக்கு மரியாதை செலுத்தச் செல்பவர்கள் இப்படி பல கடைகளையும், வீடுகளையும் அடித்து தாக்குவது என்ன நாகரீகம்? மிகவும் கேவலமான மனநிலை உடையவர்கள் என்பதைத் தான் து காட்டுகிறது

நான் கடைசி எச்சரிக்கையாகச் சொல்வேன்

இடிஅமீனைப் போல மன்னனைப்போல உங்களை சுற்றி இருப்பவர்களே உங்களை அழிக்க வழி செய்து கொள்ளாதீர்கள் இதில் கருணாநிதி இனியாவது விழிப்புடனிருக்க வேண்டும்.

## அலை ஓசை ஆசிரியர் பரசுராமன் பேச்சு



தலை வரை வழிமொழிந்து பேசிய, ‘அலை ஓசை’ ஆசிரியர் பரசுராமன் கூறியதாவது:—

என்னைக் கொலை செய்யப் போவதாக டெலிபோனில் மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள்

பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாக்க பத்திரிகையாசிரியர்கள் உயிர்களைப் பணயம் வைத்துத்தான் தீரவேண்டுமென்றால், அதற்கு பலியாகும் முதல் உயிர் எனது உயிராக இருக்கட்டும்

நான் கொலை செய்யப்பட்டு விட்டால் என்னைச் சுற்றி உட்கார்ந்து அழுவதற்கு பெண்டாட்டி பிள்ளைகள் இல்லை என்னுடைய மனைவி மக்கள் நடுத்தெருவில் நிற்கப்போவதும் இல்லை ஏனென்றால் இன்னும் நான் கல்யாணமே செய்துகொள்ளவில்லை

ஆனால் இதே வன்முறை நீடிக்குமானால் அமைதிப் பூக்காடு என்று அளக்கப்படும் தமிழ் நாட்டின் நிலை என்ன ஆகும்? இந்தியாவின் தென்கோடியில் தமிழ்நாடு என்று ஒரு நாடு இருந்தது. அந்த நாடு இந்த மாதிரி வளர்ந்து இந்த மாதிரி அழிந்தது என்று வரலாற்று நூல்களில் படித்துத்தான் வருங்காலச் சந்ததிகள் அறிந்து கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த நிலையைத்தான் இங்குள்ளவர்கள் விரும்புகிறார்களா? இந்த நிலை வளருவதைத்தான் இங்குள்ள பிரபல பத்திரிகைகள் விரும்புகின்றனவா?

அலைஓசை அலுவலகம் சூறையாடப் பட்டதையும், வேலூர் நாராயணனைக் கொலை செய்ய முயன்றதையும் வடநாட்டுப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துச் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன.

பம்பாய் டெல்லியிலிருந்து வருகின்ற டைம்ஸ் ஆப் இந்தியா டில்லியிலிருந்து வெளிவரும் பேட்ரியாட இந்துஸ்தான் டைம்ஸ் ஆகிய பத்திரிகைகள். இந்த வன்முறைச் சம்பவத்துக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை சென்னையிலிருந்து வெளிவரும் இந்துவும், எக்ஸ்பிரசும் கொடுக்காததேன்?

இந்தச் சம்பவங்களை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டால் அலை ஓசைக்கு நேர்ந்த கதி நமக்கும் வரும் என்று அந்த ஏடுகள் பயப்படுகின்றனவா? அவ்வளவு பயத்துடன் பத்திரிகைகள் நடத்துவது அவசியந்தானா?

இவ்வாறு அலை ஓசை ஆசிரியர் பரசுராமன் பேசினார்,

## டி. ஆர். ராமசாமி

கூட்டத்தில் பேசிய டி ஆர் ராமசாமி கூறியதாவது

பத்திரிகைகளை தாக்கி அழிப்பது ஜனநாயகத்தையே கொல்லுகின்ற முயற்சியாகும் பத்திரிகைகாரர்கள் விழிப்புடனும் ஒற்றுமையுடனும் இருக்கஇந்தச் சம்பவம் நமக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும் இந்தியா பூராவும் உள்ள பத்திரிகைகள் அலைஓசை நாள் என்று ஒரு நாள் அர்த்தால் நடத்தி பத்திரிகைசுதந்திரத்தையும ஜனநாயகத்தையும் காப்போம்என்றுகூறினர் மேலும் அறந்தைநாராயணன் (ஜனசக்தி) டாக்டர் விஜயலட்சுமி, தொழிற் சங்கத்தலைவர் எஸ் கிருஷ்ணன்மூர்த்தி எம் ஆர் லட்சுமி நாராயணன் ஆகியோருப் கூட்டத்தில் அலை ஓசை மீதுநடந்ததாக்குதலை கண்டித்தும் சிந்தனைச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் ஜனநாயகத்தைக் காக்கப் பொதுமக்கள் துணை புரிய வேண்டுமென கேட்டுக் கொண்டனர்

கூட்டத்திற்கு சென்னை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் துணைத் தலைவர் எஸ் அரிகர சுப்பிரமணியம் தலைமை தாங்கினார்

## எத்தர்களை முறியடிக்கும் ஏடு: ராமச்சந்திரன் பேச்சு



சென்னை ஜுன் 20—அலை ஓசை போன்ற நடுநிலை ஏடுகளை நசுக்கிவிட ஏற்கனவே பத்திரிகையாளர்களைப் பழி வாங்கிய எத்தர்கள் முயலுகிறார்கள் அதை அலைஓசை முறியடிக்கும் என்று தமிழக பழைய காங்கிரஸ் காரியதரிசி பி ராமச்சந்திரன் அறைகூவல் விடுத்தார்.

தமிழ்நாடு பழைய காங்கிரஸ் கட்சியின் செயலாளர் பி. ராமச்சந்திரன் பேசியதாவது:—

பத்திரிகை சுதந்திரத்தைப் பேணிக்காக்க இந்தக் கூட்டம் கூட்டப்பட்டு இருக்கிறது. ‘அலைஓசை’ அலுவலகத்தை மும்முறை தாக்கி இருக்கிறார்கள் போலீசார் பாதுகாப்புக்காக உடனே வரவில்லை. உலகில் ஜனநாயக நாடுகளில் வன்முறையின் மூலம் எந்த ஒரு பத்திரிகையையும்தடுத்துநிறுத்தியதாக வரலாறே இல்லை, ஒருவேளை சர்வாதிகார நாடுகளில் வேண்டுமானால் இவ்வாறு நடந்து இருக்கக்கூடும்.

ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட நாடுகளில் இம்மாதிரி வன்முறை தாக்குதல் முயற்சி பலிக்காது. மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க மாட்டார்கள்

#### சக்தி உண்டு

வன்முறை மூலம் பத்திரிகை சுதந்திரத்தை இன்று பலர் பறிக்கமுயற்சித்தாலும் அது முடியாத ஒன்று அப்படிப் பறித்தால் மதம்பிடித்த யானை தன் தலையிலேயே மண்ணைவாரி இறைத்துக் கொண்டது போலாகும் ஒரு சிலபத்திரிகையாளர்களை சில எத்தர்கள் தங்கள் அலுவலகத்திலிருந்து. வேலையிலிருந்து வெளியேற்றி விட்டால், அவர்கள் தனியாக வெளியேறி, அந்த சவாலை ஏற்று ஒரு பத்திரிகையைக் கொண்டுவரும் சக்தி பத்திரிகையாளர்களுக்கு உண்டு. இன்று ‘அலை ஓசை’ பத்திரிகைக்கு ஏற்பட்ட நிகழ்ச்சி நாளை எல்லா பத்திரிகைகளுக்கும் ஏற்படும்.

#### தொடர் சங்கிலி

இன்று ஒரு பத்திரிகை மீது தாக்க ஆரம்பித்தது தொடர் சங்கிலியாக நாளை எல்லா பத்திரிகைகளுக்கும் வரலாம் எந்த ஒரு கட்சியும் இந்த மாநிலத்தில் ஆட்சியில் இருக்கலாம், அல்லது பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் இருக்கலாம். ஆட்சியில் இருந்து மாறலாம். போலீஸ் துறை நிலையானது. அவர்கள் தங்கள் கடமையைச் செய்வதில் இருந்து பின் வாங்கக் கூடாது.

#### தமிழகப் போலீஸ்

ஜனநாயகத்தைக் காப்பதற்கு, பத்திரிகை சுதந்திரம் காக்கப்படவேண்டும். அலை ஓசை அலுவலகத்தை காலையிலிருந்து மாலைவரை மூன்று முறை தாக்கி இருக்கிறார்கள். வேலூர் நாராயணன் பல முறை போலீசின் உதவியை அணுகி இருக்கிறார். உலகில் தமிழ்நாட்டுப் போலீசாருக்குத் தனி மரியாதை, சிறப்பு இருக்கிறது அதைத் தொடர்ந்து நிலைநாட்டிக் கொள்ளும் வகையில் அவர்களது பணி இருக்கவேண்டும் வன்முறை எங்கே நடந்தாலும் அது கண்டிக்கப்பட வேண்டும் இவ்வாறு பி ராமச்சந்திரன் பேசினார்.

## காலித்தனத்தின் மூலம் அலை ஓசையை அழிக்க முடியாது

### கல்யாணசுந்தரம் எச்சரிக்கை

சென்னை, ஜுன். 20-- தி. மு. க. வினரின் காலித்தனத்தினால் அலை ஓசையை அழித்து விடலாம் என்று கருணாநிதி நினைக்கிறார். ஆனால் காலித்தனத்தினால் அலை ஓசை அழிந்து விடாது; அது மேலும் வளரும் என்று கல்யாணசுந்தரம் எச்சரித்தார்.

வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் எம் கல்யாணசுந்தரம் எம் பி பேசியதாவது:-

அலைஓசை மீது நடத்திய தாக்குதல், வேலூர் நாராயணனுக்கும், முதலமைச்சர் கருணாநிதிக்கும் இடையே நடைபெற்ற தனிப்பட்ட சண்டை அல்ல. இந்த நாட்டில் உள்ள உழைக்கும் மக்களுக்கும், கருணாநிதிக்கும் ஏற்பட்டுள்ள மோதல் ஆகும் இது ஒரு நாட்டின் முதல் அமைச்சருக்கே அகம்பாவம் ஏற்பட்டால் அதைப்போக்க வேண்டியது பொதுமக்களின் கடமை ஆகும். ஐயோ வன்முறை நடந்துவிட்டதே என்று கூறி கருணாநிதி கண்ணீர் விடுகிறாரே என்று நம்பாதீர்கள் அவர் ஒரு கலைஞர். எனவே அரசியலிலும் நடிக்கிறார்

கருணாநிதிக்கு, அவரது கழகத்திற்கு யாரையெல்லாம் பிடிக்காதோ அவர்களை எல்லாம் முதலில் ஒழித்துக் கட்டுவது என்று ஆளும் கட்சியினர் இறங்கிவிட்டார்கள் அயனாவரம் ஓட்டேரி ஆகிய பகுதிகளில் இன்றைக்கும் கூடத் தாக்கிக்கொண்டு இருக்கிறார்கள் போலீசை சும்மா இருக்கச் சொல்லி விட்டுவெறியாட்டம் நடத்தினார்கள் அலை ஓசை பத்திரிகையை மூன்று முறை தாக்கி இருக்கிறார்கள் முதல் தாக்குதல்நடந்தபின் நானும் மற்ற தோழர்களும் சென்று நேரில் பார்த்தோம் திரும்பிய பின்னர் மீண்டும் டெலிபோன் வந்தது. மூன்றாவது முறையாக தாக்கினார்கள். வேலூர் நாராயணன் தாக்குதலுக்கு ஆளானார் என்று தெரிவித்தார்கள், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு அமைதி கட்டிக் காக்கப்படுகிறது என்றும் தமிழகம் அமைதிப் பூக்காடாகத் திகழ்கிறது என்றும் கருணாநிதி செல்லும் இடம் எல்லாம் கொட்டி முழங்குவார் அவரையும் அவரது கழகத்தையும் நம்பிய பிரதாபசந்திரனையே முதலமைச்சரால் காப்பாற்ற முடியவில்லை வேறு யாரைக் காப்பாற்றப் போகிறார்?

#### உறுதிக்கு பாராட்டு

அலைஓசைஅலுவலகம் காலிகளாலும் குண்டர்களாலும் இவ்வளவு மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட பிறகும், அந்த ஊழியர்கள் நெஞ்சு உறுதியுடன்மறுநாளேபத்திரிகையை அரும்பாடுபட்டு வெளியிட்ட உறுதியை நான் பாராட்ட கடமைப்பட்டு இருக்கிறேன் இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவினர் ஒருபத்திரிகையில் முன்பு இருந்தார்கள் முதலாளியினால் பழிவாங்கப்



பட்டு. வேறு ஒரு பத்திரிகையைத் துவக்கினார்கள் அங்கும் பழிவாங்கப்பட்டு பிறகு, இந்தப் பத்திரிகையைத் துவக்கினார்கள் ஆனால் இங்கு அவர்களை முதலாளி பழிவாங்கவில்லை ஆளும் கட்சியும், அரசும் பழிவாங்கி இருக்கிறது.

தொழிலாளிக்கு தொழிலாளி இடையே ரத்தம்சிந்துவது நல்லதல்ல வன்முறை எங்கு நடந்தாலும் அது கண்டிக்கத்தக்கது முதலாளிவர்க்கத்திற்குத்தான் வன்முறை அவசியம் ஆனாலும் தொழிலாளி வர்க்கம்கோழைஅல்ல முதலாளிவர்க்கத்தின் வன்முறையை அடக்கி ஒடுக்கி முறியடிக்கும் சக்தி படைத்தது

#### ஒற்றுமை தேவை

இன்று இங்கு தொழிலாளர்கள் இடையே ஒற்றுமை இல்லை அதனால் முதலமைச்சர் கருணாநிதிக்கும் போலீசுக்கும் இந்த அளவு ஆணவம் ஏற்பட்டு இருக்கிறதுபிரதாப் சந்திரனின் பிரேத ஊர்வலத்தில் சென்றவர்கள் வழி நெடுக உள்ளகடைகளை எல்லாம் சொல்லை அடித்துச் சென்று விட்டார்கள் எங்கள் கட்சியின் அலுவலகத்தைச் சூறையாடி இருக்கிறார்கள் போலீசார் முன்னிலையிலேயே இவ்வளவும் நடைபெற்று இருக்கிறது போலீஸ் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கும் என்ற தைரியத்தில் தான் இவ்வளவு வன்முறைகளைச்செய்து இருக்கிறார்கள்

எங்கள் கட்சி அலுவலகத்தைத் தாக்கி இருக்கிறார்கள். தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் என்று நாங்கள் திருப்பித் தாக்க நினைத்தால் நீங்கள் தாங்கமாட்டீர்கள் உன் போலீசு போதாது. 1945லும், 1951 தெலுங்கானா போராட்டத்தையும் இன்றைய முதலமைச்சர் அறிந்து இருக்கமாட்டார். அப்போது நீங்கள் சினிமாவுக்கு திரைக்கதை வசனம் எழுத ஆரம்பித்த காலம் அது அவருக்கு நாங்கள் நடத்திய வீரம் செறிந்த போராட்டம் தெரிந்து இருக்க நியாயமில்லை. சட்டம் ஒழுங்கு அமைதி நிலை நாட்டப்படவில்லை என்றால், இந்தப் போலீசுக்கு வக்கு இல்லை என்றால், மத்திய அரசு இதற்கு நடவடிக்கை எடுக்க உரிமை உண்டு.

#### ஏழையின் சிரிப்பா இது?

ஏழையின் சிரிப்பில் இறைவனைக்காண்போம் என்று முதலமைச்சர் கூறுகிறார். இப்போது அடிப்பது எல்லாம் யாரை? ஏழையையா அல்லது பணக்காரனையா? என்று கேட்க விரும்புகிறேன். போலீசை வைத்து மிரட்டலாம் என்று பார்க்கிறார் முதலமைச்சர். கோவை விவசாயிகள் வெறும் மாட்டு வண்டிகளை நிறுத்தி சும்மா போலீசைத் திணற அடித்து விட்டார்கள். அவர்கள் பீரங்கி. துப்பாக்கி டாங்கிகளைக் கொண்டு வரவில்லை. கட்டை வண்டிகளைக் கொண்டு வந்து காவல்துறையைக் கதிகலங்க வைத்துவிட்டார்கள் இந்தப் போலீசையும் காலிகளையும் வைத்துக்கொண்டு நம்மை, பத்திரிகைகளை அழித்துவிடலாம் என்று முதலமைச்சர் தப்புக்கணக்குப் போட்டு இருக்கிறார்.

#### போலீசை பணிய வைப்போம்

இன்று தமிழகம் முழுவதிலும் 6 ஆயிரம் விவசாயிகள் இருட்சிறைகளில் வாடிக் கொண்டு இருக்கிறார்கள் சோழனின் சொந்தக்காரர் பாண்டியனின் பரம்பரை என்று தப்பட்டை தட்டிக்கொண்டு திரியும் இவரது ஆட்சியில் சிறையில் விவசாயிகள் சோளக்கஞ்சியைக் குடித்துக் கொண்டு வாடுகிறார்கள் நம்முடைய எழுச்சியின் மூலம் இந்தப் பாசிச ஆட்சியைப் பணிய வைப்போம் போக்கற்ற போலீசைப் பணிய வைப்போம் இவர்களை பணிய வைக்க வேண்டும் சென்னை நகரில் போலீஸ் கமிஷனர் அந்த வேலையை விட்டுவிட்டு தோளில் கறுப்பு சிவப்பு துண்டு போட்டுக் கொண்டு தி மு கழகத்தில் சேர்ந்து விடலாம் அந்த அளவிற்கு அவர் முறைகேடாக, படுமோசமாக செயல்பட்டு வருகிறார் போலீஸ் உதவி தேவை என்று கோரினால் போலீசார் இல்லை என்று கூறி இருக்கிறார்

யார் தவறு செய்தாலும் போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும். நேர்மையாக நடந்து கடமையைச் செய்ததற்காக போலீஸ் அதிகாரிகள் ஆளும் கட்சியினரால் தொந்தரவு அளிக்கப்படுவார்களேயானால் அவர்களுக்கு எல்லா எதிர்க்கட்சிகளும் நல்ல பாதுகாப்பு அளிக்கும் அதை விட்டுவிட்டு ரவுடிகள் அடித்தால், தாக்கினால் போலீசார் பார்த்துக் கொண்டு சும்மா இருந்தால், நாமும் சும்மா இருக்கப் போவது இல்லை என்று அதிகார வர்க்கத்திற்கு எச்சரிக்க விரும்புகிறேன் வன்முறைச் சம்பவங்களுக்கு அரசுதான் பொறுப்பு ஆகும் அதை எதிர்க்க எல்லா ஜனநாயக கட்சிகளும், தொழிற்சங்கங்களும் ஒன்றுபட்டுப்போராட வேண்டும் இவ்வாறு கல்யாணசுந்தரம் பேசினார்

‘அலை ஓசை’ தாக்குதல்:

## சேலத்தில் சர்வகட்சி கண்டனக் கூட்டம்

சேலம், ஜுன். 20— ‘அலை ஓசை’ பத்திரிகை தாக்கப்பட்டதைக் கண்டித்து சர்வகட்சி பொதுக் கூட்டம் சேலத்திலுள்ள லட்சுமி பெருமாள் கோவில் அருகில் நடைபெற்றது

கூட்டத்தில் சேலம் நகர இந்திரா காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆர் விசுவநாதன் எஸ் ஏ வடிவேலு (சோஷலிஸ்ட்) திருச்சி திலகபதி (பழைய காங்கிரஸ்)எஸ் டி ராஜூ டி பி சீனுவாசன் (சுதந்திரா)மற்றும்பலர் கலந்து கொண்டு ‘அலை ஓசை’பத்திரிகையையும் அலுவலகத்தையும் தாக்கியதைக் கண்டித்துப் பேசினார்கள்.

‘அலை ஓசை’ பத்திரிகை மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்ற நிலையை உணர்த்துகிறது. இந்த தாக்குதல் குறித்து மத்திய அரசு உடனடி நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்று கோரி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## உலகிலேயே சிறந்த பெண்ணுக இந்திரா காந்தி தேர்வு

லண்டன், ஜுன் 20—உலகிலேயே தலைசிறந்த பெண்ணுக இந்திரா காந்தி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்து நாட்டின் ரேடியோ பி பி சி உலகிலேயே தலை சிறந்தவர்கள்யார் என்பதை அறிய ஆண்டுதோறும்ஒரு போட்டி நடத்தி வருகிறது இப்போட்டியில் சிறந்த ஆணும் பெண்ணும் தேர்ந்தெடுக்கபடுவர் இவர்களை ரேடியோ நேயர்களே தேர்ந்தெடுப்பார்கள்

கடந்த ஆண்டுக்கான இந்தப் போட்டியில் உலகின் பல பாகங்களில் இருந்தும் லட்சக்கணக்கான நேயர்கள் கலந்து கொண்டார்கள் அவர்கள் கடந்த ஆண்டின் உலகின் தலைசிறந்த பெண்மணியாக பிரதமர் இந்திரா காந்தியை தேர்ந்தெடுத்துள்ளனர் சிறந்த ஆணுக மேற்கு ஜெர்மனி அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

இவர்களுக்கு அடுத்தபடியாக அமெரிக்க அதிபர் நிக்சன் முன்னாள் ஐ நா பொதுக் காரியதரிசி ஊதாண்ட் இங்கிலாந்து அரச குடும்பத்தைச்சேர்ந்த இளவரசி ஆன் ஆகியோருக்கு அதிக ஓட்டுகள் விழுந்துள்ளன


எல்லாவிதப் பயணங்களுக்கும், எம்மிடம் 38, 46, 50, 53, 58 பேர் கொண்ட டிலக்ஸ், டூரிஸ்ட் பஸ்கள் குறைந்தக் கட்டணத்தில் கிடைக்கும்.
போன்: 33493
பாரதி டூரிஸ்ட் சர்வீஸஸ்
12/13, ஈவினிங் பஜார் ரோட், சென்னை-3.

# அலை ஓசை


சென்னை 20 6 72 வெளியூர் 21 6 72

குறித்தநேரத்தில், சுத்தமாக போன்: 83711
லைன் ஆப்டோன் கலர் பிளாக்குகள்
செய்ய சிறந்த இடம்
தயா பிராசஸ்
6-நரசிங்கபுரம் தெரு, சென்னை-2





அலை ஓசை குழுமப் பத்திரிகைகள் மீது நடந்த தாக்குதலைக் கண்டித்து உழைக்கும் பத்திரிகையாளர் நடத்திய கண்டனக் கூட்டத்தில் முன்னாள் முதல்வர் பக்தவத்சலம், துக்ளக் ஆசிரியர் சோ.





அலை ஓசை மீது நடந்த தாக்குதலைக் கண்டித்து எம். கல்யாணசுந்தரமும், கண்ணதாசனும் பேசுகிறார்கள்.

# வேலூர் நாராயணன் குற்றச்சாட்டு

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு தர்மபுரி மாநாட்டில் நானும் வருந்துகிறேன்என்று சொல்லியிருக்கிறார்.

இச்செயலுக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று சொல்லவில்லை காரணம் முதல் குற்றவாளியே இவர்தானே

### மங்கையும், கங்கையும்

மங்கைக்கு சூதகம் வந்தால் கங்கையில் மூழ்கலாம் கங்கைக்கேசூதகம்வந்தால்... மற்றவர்கள் தாக்கினால் ஆட்சியிடம் முறையிடலாம் ஆட்சியே தாக்கினால் யாரிடம் முறையிடுவது?

சிதம்பரத்தில் தன்னைக் கொல்லச் சதி என்றாரே முதல்வர் அந்தச் சதி என்ன வாயிற்று? குடமுருட்டி குண்டு மாதிரி ஆகிவிட்டது

## சீலிட்ட கவரில் சதி விவரம்

ஆனால் என்னைக் கொல்ல யார் யார் சதி செய்தார்கள் என்ற விவரமெல்லாம் சீல் செய்த கவரிலே வைத்து இந்திரா அம்மையாரிடம் கொடுக்கச் சொல்லி டாக்டர் விஜயலெட்சுமி அம்மையாரிடம் கொடுத்திருக்கிறேன் நான் கொல்லப்படுவேனால் அந்த விவரம் விசாரணைக்குப் பயன்படும் (கூட்டத்தினர் உங்களை கொல்ல விடமாட்டோம் கொல்ல விடமாட்டோம் என்று முழக்கமிட்டனர்) நான் கொல்லப்படுவேனால் சர்வகட்சியினரும் என்னை எடுத்துச் சென்று அடக்கம் செய்யுங்கள் நான் கொல்லப்பட்டால் மத்தியபோலீஸ் தான் விசாரிக்கவேண்டும் மாநில போலீஸ் விசாரணை என்றால் விசாரணையே வேண்டாம.

இருப்பது கொஞ்சகாலம் தான் அதற்குள் நான் உண்மைகளை எல்லாம் சொல்லி விட்டுச் சாவேன் யார் கூப்பிட்டாலும் எல்லா கூட்டத்திலும் வந்து பேசுவேன்

### பிரதாப் சந்திரன்

பிரதாப்சந்திரன் என்ற தோழர் எனக்கு நெருங்கிய நண்பர் அவர் கொலையுண்டதில் முதல்வரைவிட எனக்கு வருத்தம் அதிகம் அவர் மிகவும் நல்லவர் குழந்தை யுள்ளம் படைத்தவர் அவரை இப்படியெல்லாம் உருவாக்கி கொலைக்கு உள்ளாக்கி விட்டார்கள்.

### தாக்குதல் விவரம்

காலையில் ஒரு வெறிக் கூட்டம் அலைஓசை அலுவலகத்தைத் தாக்கியது நாங்கள் உடனே அவசரப் போலீசுக்கு உதவி வேண்டினோம் ஆனால் ஒருமணி நேரம் கழித்துத் தான் போலீஸ் வந்தது அதற்குள் தாக்குதல் முடிந்துவிட்டது தாக்க வந்தவர்களின் தலைவர்கள் இட்ட கட்டளை முழுமையாக நிறைவேறவில்லை அதாவது நான் கொல்லப்படாது என்னை அலுவலகநண்பர்கள் கதவை மூடிபாதுகாத்து காப்பாற்றி விட்டார்கள்

ஒரு அமைச்சர்கேட்டிருக்கிறார் குண்டர்களை 'என்னகாரியம் நிறைவேறிவிட்டதா'' இல்லை தடபிவிட்டான்''அடசோதாக்களே போங்கள்மறுபடியும்'' என்றுசொல்லியிருக்கிறார் அதற்குள் உதவியாக வந்த போலீசும் வாபஸ் பெற்றுக் கொள்ளப்பட்டது மறுபடியும் குண்டர்கள்வந்து தாக்கினார்கள் பலமுறை வேண்டியும் போலீஸ் உதவியில்லை ஆனால் இம்முறையும் அவர்கள் நோக்கம் நிறைவேறவில்லை எனவே மறுபடியும் மூன்றாவது முறையாக வந்து ஜன்னல் கதவை உடைத்து என்னைக் கல்லால் தாக்கினார்கள் மண்டையில் காயம் ஏற்பட்டது இன்னும் கால் இஞ்ச் அழுந்தியிருந்தால் உன்னைக் காப்பாற்றுவது கஷ்டமாகியிருக்கும் என்று டாக்டர்கள் சொன்னார்கள்.

முதல் முறை வந்தபோதே அச்சகத்தை நாசமாக்கி விட்டு காரையும் வேனையும் கொளுத்திவிட்டார்கள் இரண்டாம் முறையும் மூன்றாம் முறையும் வரவேண்டிய அவசியம் இல்லை என்னைக் கொல்வதைத் தவிர வேறென்ன நோக்கம்?

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கமும் இடைவிடாது ஐ.ஜி.யிடமும் கவர்னருடனும் தொடர்பு கொண்டு பாதுகாப்பு வேண்டினர்

## ஐ. ஜி. ராஜினாமா

தனிப்பட்டநண்பர்களிடத்தில் பேசும் பொழுது என்னுடைய கையை கட்டிப் போட்டிருக்கிறார்கள் என்னால் சட்டம்-ஒழுங்கைக் காக்க முடியவில்லை என்று ஐ ஜி வருந்துகிறார்

நான் அவருக்குச் சொல்வேன் இப்படிப்பட்ட உத்தியோகம் உங்களுக்குத்தேவையில்லை

இப்படி பிழைக்கவேண்டிய நிலையிலும் நீங்கள் இல்லை உடனே ராஜினாமா செய்யுங்கள் இதே காரணத்தைச் சொல்லி ராஜினாமா செய்தால் அடுத்தநாளே ஜனாதிபதி ஆட்சிவரும் இந்த நாடும் காப்பாற்றப்படும்

நாங்கள் உதவி கேட்கும் போது 6 டிவிஷன் துப்பாக்கி படை கைவசம் இருந்திருக்கிறது ஆனால் உத்தரவு இல்லை அவர்களை நான் குறை சொல்லவில்லை போலீஸ் கமிஷனரைப் பற்றி ஒருவார்த்தை. மிகவும் அசிங்கமான மனிதர்

### பொறுமையில்லை

நேற்றுவரை நான் பொறுமையாக இருந்தேன். நான் ஒன்றும் காந்தியில்லை நானும் ஆசாபாசங்கட்கு உட்பட்ட மனிதன்தானே எனக்கு இனி மேல் பொறுமையில்லை உண்மையை இனி சொல்வேன்.

### நீதி விசாரணை வேண்டும்

தாக்குதல்பற்றி நீதி விசாரணை வையுங்கள் யார் யார் இந்தச்சதியில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று நிரூபிக்கிறேன்

### சாதி வெறியா?

சாதிக்காரருக்குஅதிகவிளம்பரம் தருவதாக சொல்கிறார்கள் ஆசிரியர் குழுவைக் கேளுங்கள் நான் என்றாவது குசேலர் செய்தியை போடுங்கள் என்று சொன்னேனா?ஒரு தொழிலாளர் தலைவருக்கு அளிக்கப்படும் அளவுக்கு விளம்பரம் அளியுங்கள் அதற்குமேல் வேண்டாம் என்று பல முறை சொல்லியிருக்கிறேன்

குசேலர் செய்திகளை குறைக்கச் சொல்லி ஆசிரியர் குழுவிடம் சண்டை போட்டிருப்பபேனே ஒழிய கூட்டிப் போடும்படி எப்போதாவது சொல்லியிருப்பேனா என்று கேட்டுப்பாருங்கள் எனக்கு ஜாதிவெறி என்று சொல்லுகின்ற முதல்வருடைய ஜாதிவெறியை புள்ளி விபரத்தோடுவிளக்கிச் சொல்வேன்;

இந்த சம்பவத்தின் மூலம் அலை ஓசை நிச்சயம் வளரும் மக்கள் பத்திரிகையாக வளரும்.

நான் இறந்துவிட்டால் 'அலைஓசை' பத்திரிகை நடத்தியதற்காக கொல்லப்பட்ட வேலூர் நாராயணன் என்று சமாதி மீது எழுதி வையுங்கள்

இவ்வாறு வேலூர் நாராயணன் பேசினார்

---

சட்டம் - ஒழுங்கை கையில் எடுத்துக்கொள்வது யார்?

# முதல்வர்கருணாநிதிக்கு சிந்தன் கண்டன அறிக்கை

**சென்னை, ஜூன் 20— திமுக வினர் காலித்தனத்தில் ஈடுபடும போது, சட்டம் ஒழுங்கை மக்கள் கையில் எடுத்துக் கொள்வதாக முதலமைச்சர் கருணாநிதி கூறுவது விந்தையாக இருக்கிறது என்று வி பி சிந்தன் ஒரு அறிக்கையில் கூறி இருக்கிறார்**

இதுபற்றி சிந்தன் ஒரு அறிக்கையில் கூறி இருப்பதாவது

சிம்சன் நிறுவனங்களைமீண்டும் திறக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்ததுவோமென்று முதலமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் குறிப்பிட்டது வரவேற்கத் தக்கதே

சட்டத்தை அவரவர் தங்கள் கையிலெடுத்துக்கொள்வது நல்லதல்ல என்று முதலமைச்சர் பொதுவாகப் பேசுவது விந்தையாக உள்ளது

தொழிற்சங்க ஊழியர்களின் வீடுகளுக்கு நெருப்பிட்டும்வீடுகள் சூறையாடப்பட்டும் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டும் பத்திரிகை அலுவலகங்கள் தாக்கப்பட்டும் மாற்று கட்சியைச் சேர்ந்தவர்களை கத்தியால் குத்தியும் கொலை வெறி தூண்டும் பிரசுரங்களை வெளியிட்டும் இன துவேஷத்தைத் தூண்டியும் செயல் புரிகின்ற அவருடைய கட்சியைச்சார்ந்தவர்களுக்காக தானா இந்த உபதேசம் என்று என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை

முதலமைச்சர் பேசுவது உண்மையானல் போலீஸ் ஒருதலை பட்சமாக நடக்காது என்ற நிலைமையை முதலில் ஏற்படுத்தப்படும்

வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கெதிராக தகுந்த நடவடிக்கை எடுத்து மாற்று கட்சியைச் சார்ந்தவர்களும் இந்நாட்டு பிரஜைகள்தான் என்று நிரூபிக்கட்டும்

தொழிற்சங்கங்களை தொழிலாளர்கள் விரும்புகின்றவர்களை தலைவர்களாகத் தேர்ந்தெடுத்து நடத்த அனுமதிக்கட்டும்

சிம்சன் தொழிற்சாலையை விரைவில் திறக்க ஏற்பாடு செய்யட்டும்

முதலமைச்சர் இந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்

கடந்த ஓராண்டுகாலமாக சென்னை நகரத்திலும்சுற்றுப் புறங்களிலும் தொழிற் சங்க இயக்கத்தில் நடைபெற்ற வன்முறைகளைப் பற்றி பாரபட்சமற்ற ஒரு விசாரணைக்கு முதலமைச்சர் ஏற்பாடு செய்யட்டும்.

தீய சக்திகள்என்றும்தீவிரவாதிகளென்றும் அராஜகப் போக்கென்றும்பொதுவாகப் பேசுவதால்பயனில்லை முதலமைச்சர் இந்த நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டுமென்று மீண்டும்வலியுறுத்துகிறேன்

இவ்வாறு சிந்தன் தனது அறிக்கையில் கூறிஇருக்கிறார்

---

(6-ம் பத்தி தொடர்ச்சி)

மாதிரி வன்முறைச் செயல்களை அடக்கி ஒடுக்க எல்லாக் கட்சிகளும்தொழிற்சங்கத்தினரும் ஒன்றுபட்டு எழுந்தால் அவைகள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும் இவ்வாறு கவிஞர் கண்ணதாசன் பேசினார்

### அலை ஓசை வாங்கிய போலீசார்

கோகலே மண்டபத்தின் முன்னால் சைக்கிளில் ஒருவர் அலைஓசை பத்திரிகை விற்றுக் கொண்டு இருந்தார் கூட்டத்திற்கு வந்த ஒவ்வொருவரின் கரங்களிலும் அலை ஓசை பத்திரிகை காட்சி அளித்தது கூட்டத்திற்கு ஏராளமான தமிழக ரகசிய போலீசார் வந்து இருந்தார்கள் அவர்களும் ''அலை ஓசை'' பத்திரிகையை வாங்கி ஆவலுடன் படித்தார்கள்

---

# தொடர்ந்து போராட விவசாயிகள் உறுதி

**கோவை, ஜூன் 20— மின்சாரக் கட்டணத்தில் சலுகை அளித்திருப்பதாக கருணாநிதி அறிவித்திருப்பது வெறும் கண்துடைப்பு எனவே போராட்டம் தொடர்ந்து நீடிக்கும் என்று விவசாயிகள் போராட்டக் குழு அறிவித்துள்ளது**

மின்கட்டண குறைப்பு விவசாய வருமானவரி விலக்கு மற்றும் 1 கோரிக்கைகளுக்காக தமிழக முழுவதும் உள்ள விவசாயிகள் அயராது அறப்போர் நடத்தி வருவதும் இதன் எதிரொலியாக மின் கட்டணத்திலும் விவசாய வருமான வரியிலும் சலுகை அளிப்பதாக முதலமைச்சர் கருணாநிதி அறிவித்து இருக்கிறார்

ஆனால் கருணாநிதியின் இந்த அறிவிப்பு வெறும் கண் துடைப்புதான். எனவே விவசாயிகள் போராட்டம் நிற்காது நீடிக்கும் என்று விவசாயிகள் போராட்டகுழு பிரமுகர் ஒருவர் கூறினார்.

கைது செய்யப்பட்ட விவசாயிகள் அனைவரையும் விடுதலை செய்து, அவர்களுடன் பேச்சு நடத்தி தீர்வு கண்பதற்குப்பதிலாக கருணாநிதி தன்னிச்சையாக அறிவிப்பு வெளியிட்டுள்ளார் இதை ஒப்புக்கொள்ள மாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்

### சர்வகட்சி கூட்டம்

கருணாநிதியின் அறிவிப்புக்குப் பின் விவசாயிகள் போராட்டத்தை எப்படி நடத்துவது என்பது பற்றி ஆலோசிப்பதற்காககோவையில் சர்வகட்சித்தலைவர்கள் கூட்டம் இன்று நடந்தது

இந்தக்கூட்டத்தில் விவசாயிகள் போராட்டத்தின் அடுத்த கட்டம் பற்றி ஆலோசிக்கப்பட்டது

### மேட்டூரில்

மேட்டூரில் சர்வகட்சி விவசாயிகளின் மறியல் போராட்டத்தில் 20 பேர் கைது செய்யப்பட்டார்கள்

---

# கண்ணதாசன் யோசனை

(1-ம் பக்க தொடர்ச்சி)

கண்மணியே போய் விட்டாயா என்று புலம்பினார்கள்

அண்ணாதுரை தனது கடைசி காலம் வரை முழுமையாக ஒரு காரியம் செயததில்லை அவருக்கு இன்று காந்தியை விட நாடுமுழுவதிலும் சிலை வைத்துக் கொண்டே போகிறார்கள் இது ஏன் என்று தெரியவில்லை

தமிழ் நாட்டில் வளமும் கல்விவளமும் நீர் வளமும் ஏற்படச் செய்த பெருமை தலைவர் காமராஜர் ஒருவருக்குத்தான் உண்டு அவரது ஆட்சிக் காலத்தில் 28 ஆயிரம் பள்ளிக்கூடங்களைக் கட்டினார் ஏராளமான அணைகள் ஏற்பட்டதும் அவரது காலத்தில் தான் அவற்றை எல்லாம் இப்போது திமுக சாதனை பாரீர் என்று கூறுகிறார்கள் எப்போதுமேசொந்தசாதனையைக் கூறுவது இல்லை அவர்கள் எங்கேயாவது பிணம் விழுந்தால் அதைத் தூக்கி வைத்துக் கொண்டு சொந்தம் கொண்டாடுவார்கள் கறுப்பு — சிவப்பு துண்டை போர்த்தி ஊர்வலம் நடத்துவார்கள் இது அவர்களின் ராடிக்கை

ஆவன்முறையை நம்பியே ஆட்சி நடத்தலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள் வதைத்தான் அரியாங்குப்பம் இடைத்தேர்தலில் நம்பினார்கள் மத்திய ரிசர்வ் போலீசை வரவழைத்தோம் வன்முறைக்குச் சரியான அடிகொடுத்தோம் அவர்களுக்கு மரண அடி கிடைத்தது ஒருமாநிலத்தில் சட்டம் ஒழுங்கு அமைதி காக்கப்படவில்லையானால் வன்முறைகள் தொடருமேயானால் இந்த அரசை மத்திய அரசு டிஸ்மிஸ் செய்ய அரசியல் சட்டத்தில் இடமுண்டு கருணாநிதி திறலமமிக்கவர் தான். ஆனால்இந்திராகாந்திஅவரைவிடத் திறமை மிக்கவர் அவர் அதிகம்பேசமாட்டார் எதை எதை எந்தநேரத்தில் எப்படிக் செய்யவேண்டுமோ அதைச் செய்யக்கூடியவர்

### திட்ட மிட்ட தாக்குதல்

அலை ஓசை மீது நடத்திய தாக்குதல் திட்டமிட்டு நடத்தியதாகும்இம்

(1-ம் பத்திபார்க்க)

---

# 12 ஆயிரம் துறைமுகத் தொழிலாளர் ஸ்டிரைக்

**சென்னை, ஜூன் 20— சென்னை துறைமுகத் தொழிலாளர்கள் 8.3 சதவீதம் போனஸ் கோரி இன்று காலை 6 மணி முதல் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர் தொழிற்சங்கத் தலைவர் எஸ் சி சி அந்தோணிப்பிள்ளை தலைமையில்நடைபெறும் இந்தப் போராட்டத்தில் சுமார் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்**

இந்த அடையாள வேலை நிறுத்தம் நாளை (புதன் கிழமை) காலை 6மணிவரை நடைபெறுமென்று தொழிலாளர்கள் அறிவித்துள்ளனர்

---

அலை ஓசை மீது தாக்குதல்

# போலீஸ் அலட்சியம்: பத்திரிகையாளர் கடுங்கண்டனம்

**சென்னை, ஜூன். 20— அலை ஓசை தாக்கப்பட்டபோது, போலீஸ் உதவி கோரப்பட்டும் கூட, போலீசார் தக்க சமயத்தில் பாதுகாப்பு அளிக்க முன்வராததற்கு உழைக்கும் பத்திரிகையாளர் சங்க சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் கடுங்கண்டனம் தெரிவிக்கப்பட்டது.**

அலை ஓசை தாக்கப்பட்டது குறித்து கோகலே ஹாலில் உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளனத்தின் சார்பில் நடத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:—

### பிரதாப் சந்திரனுக்கு அனுதாபம்

பிரதாப்சந்திரன், கண்ணன் அய்யங்கார் கொலையுண்டதற்கு இக் கூட்டம் அனுதாபம் தெரிவித்துக் கொள்வதுடன் அக்கொலைக்குக் காரணமான வன்முறையையும் இக்கூட்டம் கண்டிக்கிறது

### வன்முறைக்கு கண்டனம்

அலை ஓசை பத்திரிகையின் மீது நடந்த வன்முறை தாக்குதலை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது இந்த தாக்குதலில் ஏற்பட்ட பெரு நஷ்டத்திற்கு ஈடுகட்டும் வகையில் பெருவாரியான ஆதரவைத்தர பொது மக்களை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது

### போலீஸ் அலட்சியம்

அலை ஓசை அலுவலகமும் மற்றும் குமுதம், கல்கண்டு, சிகப்புநாடா போன்ற பத்திரிகைகளும் தாக்கப்பட்டது சம்பந்தமாக போலீஸ் உதவி கோரியும் சரிவர பாதுகாப்பு கிடைக்காததை இக்கூட்டம் வருத்தத்துடன் சுட்டிக் காட்டுவதுன் தனது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.


### நவசக்திக்கு நன்றி

அலை ஓசை அலுவலகம் கடுமையாக சேதப்படுத்தப்பட்டு இன்னும் ஒரு மாத காலத்திற்கு பத்திரிகை வெளிவரமுடியாது என்ற நிலையில் அலை ஓசை தொடர்ந்து வெளிவருவதற்கு எல்லா வகையான உதவிகளையும் செய்து வரும் நவசக்தி நிறுவனத்திற்கு இக்கூட்டம் தனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது

### நீதி விசாரணை

அலை ஓசை அலுவலகமும் வேலூர் நாராயணனும் தாக்கப்பட்டது சம்பந்தமாகவும், அந்த விஷயம் பற்றி இதுவரை யாரும் கைது செய்யப்படாதது பற்றியும் நீதி விசாரணை நடத்தவேண்டும் என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதியை இந்தக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது

தீர்மானங்களை தமிழக ஏ ஐ டி யு சி செயலாளர் கே எம் சுந்தரம் முன்மொழிந்தார்கூடியிருந்தகூட்டத்தினர் கடலலைபோல் கையொலி செய்து வழிமொழிந்தார்கள்




Edited and Published by E. Parasuraman, 1-B, Harley's Road, Madras-10. Printed by M. Dhanushkodi at Navasakthi Press, 60, Kutcheri Road, Mylapore, Madras-4. for Southern Publications Ltd.
PHONES:
EDL: 662233 ADMN: 663950